# தலை முடிக்கு பூசும் சாயம் சம்பந்தமான பிரச்சினைகள்

# (Problems related to hair dye)

இக்காலத்தில் தலைமுடிக்கு சாயம் பூசுவது மிகவும் பிரசித்தமானதொன்றாகும். இச்சாயத்தின் பாவனை மூலம் பலர் ஒவ்வாமைக்கு உள்ளாகின்றனர். இது முடிக்கு சாயம் பூசுவதால் ஏற்படும் ஒவ்வாமை எனப்படும் (hair dye contact dermatitis).

இந்த ஒவ்வாமை பொதுவாக நிரந்தரமான (permanent) மற்றும் இடைத்தரமான (semi-permanent) சாயங்களினால் ஏற்படுகிறது.

PPD (paraphenylenediamine) என்ற ஒரு வகையான இரசாயனப்பதார்த்தம் சாயத்திற்குள் காணப்படுகிறது. இதுவே பொதுவாக ஒவ்வாமைக்கு காரணமாக அமைகின்றது. கறுப்பு மற்றும் கடும் மண்ணிற சாயங்கள் PPDயை உள்ளடக்கியுள்ளன.

PPDயை தவிர மற்றைய இரசாயனப் பதார்த்தங்களும் ஒவ்வாமையை ஏற்படுத்தலாம்.

உ-ம்: அமோனியா

### 1. யாருக்கு இந்த நிலைமை அதிகமாக ஏற்படுகிறது?

சிலர் ஒவ்வாமை நிலைமையினால் கூடுதலாக பாதிக்கப்படுவார்கள். இப்படியானவர்களுக்கு சாயத்தில் உள்ள இரசாயனப் பதார்த்தங்கள் ஒவ்வாமையை ஏற்படுத்தலாம்.

### 2. இது எப்படி ஏற்படுகின்றது?

இரண்டு வழிகளில் ஏற்படலாம்.

- Irritant Contact Dermatitis - இங்கு பதார்த்தங்கள் நேரடியாக தோலை பாதிப்பதால் ஒவ்வாமை ஏற்படுகின்றது.
- Allergic Contact Dermatitis - இங்கு பதார்த்தங்களின் தூண்டலினால் ஒவ்வாமை ஏற்படுகிறது.

### 3. முடிக்கு சாயம் பூசுவதால் ஏற்படும் ஒவ்வாமையின் அறிகுறிகள் யாவை?

சாதாரணமான அறிகுறிகள் தொடக்கம் பாரதூரமான அறிகுறிகள் வரை வேறுபடலாம்.

சாதாரண அறிகுறிகள்: தோலில் சிவப்பு தளும்புகள் ஏற்படல், அரிப்பு அல்லது கடி ஏற்படல், தோல் உலர்தல், கொப்புளங்களும் கசிவும் ஏற்படல். இந்த நிலைமை தலையில் அல்லது முகத்தில் ஆரம்பித்து மற்றைய பகுதிகளுக்கு பரவக்கூடும்.

சிலவேளைகளில் தலை மற்றும் முகப்பகுதிகளில் வீக்கம், உடம்பு சோர்வு, உடம்பு பூராவும் சொறி (urticarial rash) என்பன ஏற்படலாம்.

கடுமையான அறிகுறிகள்: முகவீக்கமும் தோல் மாற்றங்களும் சாயம் பூசிய சில நிமிடங்களில் ஏற்படல், கண்ணை சுற்றி வீக்கம், மயக்கம், சுவாசிப்பதில் கடினம், உணவு விழுங்குவதில் கடினம், வயிற்று வலி, வாந்தி, முழுமையான உணர்வு இழப்பு என்பன ஏற்படலாம். தாமதமின்றி உடனடியாக சிகிச்சையளிக்காவிடின் மரணமும் ஏற்படலாம்.

இந்த ஒவ்வாமை, சாயம் பாவிக்க தொடங்கிய காலத்தில் அல்லது பல வருடங்களின் பின்னரும் கூட ஏற்படலாம்.

## 4. இந்த நிலைமையை எவ்வாறு தடுக்கலாம்?

- சாயத்தை மிகவும் கவனமாக பூசவேண்டும்.
- உத்தேசிக்கப்பட்ட காலத்திற்கு மிதமிஞ்சி சாயத்தை பூசி வைத்திருக்கக்கூடாது.
- சாயம் பூசிய பின் முடியை நன்கு கழுவ வேண்டும்.
- சாயம் பூசும் போது கையுறை அணிதல் வேண்டும்.

## 5. உங்களுக்கு சாயம் ஒவ்வாமை உள்ளதென்பதை எவ்வாறு அறியலாம்?

சாயத்தை பூசுவதற்கு முன் சிறிதளவு சாயத்தை எடுத்து காதுகளின் பின்னாலுள்ள தோலில் அல்லது முழங்கையின் உட்புற பகுதியில் பூசி அரை மணித்தியாலத்திற்கு அல்லது பக்கெட்டில் பரிந்துரைக்கப்பட்ட காலம் வரை வைத்திருந்த பின்னர் கழுவ வேண்டும். தோலில் ஏதாவது மாற்றங்கள் ஏற்படுகின்றதா என தொடர்ந்து 48 மணித்தியாலங்கள் கண்காணிக்க வேண்டும்.

ஒரே வகையான சாயத்தை தொடர்ந்து பாவிப்பவர்களாயினும் ஒவ்வொரு முறையும் பூசுவதற்கு முன்னரும் இவ்வாறு செய்தல் வேண்டும்.

ஏதாவது பதார்த்தம் ஒவ்வாமையை ஏற்படுத்துகின்றது என்ற சந்தேகம் இருந்தால் தோல் கிளினிக்கில் Patch Test என்னும் சோதனை செய்வதன் மூலம் அறிந்து கொள்ளமுடியும் (ஆனால் சில பதார்த்தங்கள் Patch Test இல் பரிசோதிக்கப்படுவதில்லை).

சிலவேளைகளில் இப்பதார்த்தங்களை பல காலம் பாவித்த பின்னரே ஒவ்வாமை ஏற்படுகிறது.

**6. இதற்குரிய சிகிச்சை முறை என்ன?**

- லேசான ஒவ்வாமை ஆயின் தலையையும் தலை முடியையும் விரைவாக நன்கு கழுவி தகுதி வாய்ந்த வைத்தியரிடம் ஆலோசனை பெறவும்.
- உங்களுடைய வைத்தியர் கிறீம்களையும் மாத்திரைகளையும் சிபாரிசு செய்யக்கூடும்.
- ஒவ்வாமை நிலைமை பரிபூரணமாக குணமாகிய பின்னர் PPD இல்லாத சாயத்தை Patch Test செய்த பின்னர் பாவிக்கமுடியும்.
- கடுமையான நோய் அறிகுறிகள் தோன்றுமானால் உடனடியாக அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெறவும்.